2019 ஜனவரி 5]

அலுவலகத்தோடு ஒட்டி அமைந்திருக்கின்றன. திண்டிவனம் நகரத்திலும் அப்படித்தான் நகரத்தின் மத்தியிலே கிளைச் சிறையும், தாலுகா அலுவலகமும் அமைந்திருக்கிறது. பல்வேறு இடங்களிலே அப்படி அமைந்திருக்கின்ற அந்தக் கிளைச் சிறைகளையெல்லாம் துறையின் மூலமாகக் கணக்கெடுக்கச் சொல்லி, ஆய்வு செய்யச் சொல்லி அப்படிப்பட்ட கிளைச் சிறைகளையெல்லாம் ஊருக்கு வெளியிலே கொண்டு செல்வதனால் அந்தக் கிளைச் சிறையையும் விஸ்தீரணமாகக் கட்டுவதற்கும் வசதியாக இருக்கும். நகரத்தின் மையப் பகுதியில் இருக்கின்ற அந்த இடங்களை வேறு பணிகளுக்காக, அரசு நிருவாகத்திற்குப் பயன்படுத்துவதற்கும் வசதியாக இருக்கும் என்று ஏற்கெனவே துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு, அந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***19044—திருமதி ப. சத்யா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி நகரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பண்ருட்டி நகரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*

திருமதி ப. சத்யா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் அன்புத் தம்பிகளான மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'எனக்குப் பின்னாலும் 100 ஆண்டுகள் கழகமே தமிழகத்தை ஆளும்' எனும் வேதம் தந்த மாபெரும் மக்கள் தலைவி, மாண்புமிகு அம்மா அவர்களின் மக்கள் நல அரசில் வருங்கால சமுதாயத்தை வழிநடத்தப் போகும் மாணவ, மாணவிகளின் கல்வி நலனைக் கருத்தில்கொண்டு, பண்ருட்டி தொகுதியின் பிரதான நகரமான பண்ருட்டி நகரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினை அமைத்திட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தர முன்வருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி தொகுதி அமைந்துள்ள கடலூர் மாவட்டத்தில் ஏற்கெனவே, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும், அரசு நிதி உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும், சுயநிதி கல்லூரிகள் 16–ம், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தினுடைய இணைவு பெற்ற கல்லூரி ஒன்றும், உணவு மேலாண்மை மற்றும் பயிலகக் கல்லூரி ஒன்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதிலே அரசு கல்லூரி, அரசு உதவி பெறும் கல்லூரிகளில் மட்டும் மாணாக்கர்களுடைய சேர்க்கைக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 720, அதிலே 198 இடங்கள் காலியாக உள்ளன. தனியார் சுயநிதி கல்லூரிகளிலே 6,390 இடங்கள் ஒப்பளிக்கப்பட்டதில் 3,258 இடங்கள் காலியாக உள்ளன. ஆகவே, கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியில்*

2019 ஜனவரி 5]

ஏற்கெனவே இருக்கின்ற கல்லூரிகளிலேயே மாணக்கர்களின் சேர்க்கை சதவிகிதம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், மேலும், புதிதாக ஒரு கல்லூரி தொடங்குகின்ற வாய்ப்பு மற்றும் சாத்தியக்கூறுகள் குறைவாக இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*

திருமதி ப. சத்யா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி நகரின் நான்கு திசைகளிலும் 50 கிலோ மீட்டர் தூரத்தில் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றுகூட இல்லை. போதுமான இடவசதி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ளது. அங்கு கல்லூரியை அமைத்துக் கொடுத்தால், கடலூர் மாவட்டத்தில் உள்ள மாணவ, மாணவியர்களுக்கு அது பயனுள்ளதாக அமையும். ஆகவே, தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பதை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பணிவோடு வேண்டுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பண்ருட்டி நகரில் ஒரு புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவது குறித்து, தேவைக்கேற்ப ஆராய்ந்து, மாண்புமிகு அம்மா வழி தொடரும் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 'ஆஞ்சநேயர் ஜெயந்தி' ஆகும். அசோகவனத்தில் சீதை சிறையில் இருக்கின்றபோது, இராமபிரானின் தூதுவராக ஆஞ்சநேயர் சென்று, சீதையை*

சந்திக்கும்போது, அவர் கணையாழியைக் கொடுத்து, முத்திரை மோதிரத்தை அடையாளமாகப் பெறுகிறார். அதனைப் பெற்றுக்கொண்டு, 'தாயே! என்னை ஆசீர்வதியுங்கள்' என்று கேட்கிறபோது, பொதுவாக பெரியவர்கள் ஆசீர்வாதம் செய்யும்போது 'அட்சதையையோ அல்லது மலர்களையோ தூவுவது வழக்கம்' என்பதால், சீதை சுற்றுமுற்றும் பார்க்கிறார். ஆனால், அங்கு எதுவுமே இல்லாதபோது, பக்கத்தில் வெற்றிலைக் கொடி ஒன்றைப் பார்க்கிறார். வெற்றிலைக் கொடியைப் பார்த்தவுடன், அதிலிருந்து இரண்டு இலைகளைக் கிள்ளி எடுத்து, எத்தனை இலைகள், இரண்டு இலைகளைக் கிள்ளி எடுத்து, ஆசீர்வதித்து, 'நீ என்றைக்கும் சிரஞ்சீவியாக இரு, இந்த இலை உனக்கு வெற்றி இலையாக இருக்கட்டும்' என வாழ்த்தி அனுப்புகிறார். ஆகவே, ஆஞ்சநேயர் பிறந்த இந்த தினத்திலே, நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், (குறுக்கீடு) இன்றைக்கு அந்த இரட்டை இலையைப் பெற்றிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிசாமி அவர்கள், இன்றைக்கு எடுக்கிற முடிவுகள், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அறிவிக்கிற அறிவிப்புகள் 'வெற்றி தருபவையாக இருக்கட்டும்' என்று ஆஞ்சநேயரை எண்ணி, வாழ்த்துகிறேன். நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், என்னுடைய திருநெல்வேலி மாவட்டம் கல்வியில் மிகச் சிறந்த மாவட்டம் ஆகும். தென்னகத்தின் Oxford என்றழைக்கப்படுகின்ற. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: தென்னகத்தின் Oxford என்று அழைக்கப்படுகின்ற ஊராகும். ஆனால், எங்களுடைய திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளே இல்லையென்ற அவப் பெயர் இருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயர் சொல்கிற இந்த அரசு, அந்த அவப் பெயரை நீக்கி, ஒரு நல்ல பெயரை ஏற்படுத்துகின்ற வகையில், திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டும். அதையும் வள்ளியூரில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்கிறேன். எதற்காக வள்ளியூரில் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்கிறேன் என்றால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரின் பெயர் பழனிசாமி. எனவே, பழனிசாமி அவர்களின் தலைமையில் இயங்கும் நம்முடைய அரசு

2019 ஜனவரி 5]

வள்ளியின் பெயரில் இருக்கிற எங்கள் வள்ளியூருக்கு அதனைத் தந்தால் பொருத்தமாக இருக்குமென்பதால், வள்ளியூரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினை அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அரசின் முன்பாக சமர்ப்பிப்பதோடு, அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தொடர்ந்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரியானது எங்கெங்கு தேவைப்படுகிறது என்பதைக் கருத்தில்கொண்டு, 16 கல்லூரிகளை வழங்கினார்கள். அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் இந்தக் கல்வியாண்டிலேயே 5 கல்லூரிகளை தேவைப்படுகின்ற இடங்களில், மாணக்கர்களின் சேர்க்கை சதவிகிதம் கூடுதலாக இருக்கின்ற இடங்களில் வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பகுதியிலே, வரும் கல்வியாண்டிலே அந்தப் பகுதி மாணாக்கர்களின் சேர்க்கை சதவிகிதம் கூடுதலாக இருக்கும்பட்சத்தில், அரசு அதனை அமைப்பது பற்றி பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்து, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

18—

நூற்பாலை

***25107—திரு. அ. நல்லதம்பி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூரில் நூற்பாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?